இணைப்பு I

[387-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 669-க்கான விடையைக் காண்க]

யூனிசெப் நிறுவனத்தின் உதவியுடன் மாநில அரசு நடத்தி வரும் கல்வித் திட்டங்களின் விவரங்கள் :—

1. பள்ளிகளில் விஞ்ஞானக் கல்வியின் தரத்தை உயர்த்த யூனிசெப் நிறுவன உதவியுடன் மாநில அரசுப்பள்ளிக் கல்வித் துறை பல திட்டங்களை நிறைவேற்றி வருகிறது. அவை ஒவ்வொன்றாக கீழே விளக்கப்பட்டுள்ளன.

தொடக்கப்பள்ளிகளில் அறிவியல் கல்வி மேம்பாடு :

2. இத்திட்டம் பல ஆண்டுகளாக நடைபெற்றுவருகிறது. இதன்கீழ் சில ஆயிரம் தொடக்கப்பள்ளி களுக்கும் உயர் தொடக்கப் பள்ளிகளுக்கும் அறிவியல் தளவாடப் பெட்டிகளை இலவசமாக யூனிசெப் தந்து வந்துள்ளது. அறிவியல் பயிற்றுவிப்பதில் தொடக்கப்பள்ளி/உயர் தொடக்கப் பள்ளி ஆசிரியர் களுக்கும், பள்ளித் துணை ஆய்வாளர்கள் போன்றவர்களுக்கும் மறு பயிற்சி அளிப்பதற்கும் யூனிசெப் நிதி உதவி செய்து வந்துள்ளது. இதுவரை இவ்வகையில் கிடைத்துள்ள உதவி வருமாறு :

ஆண்டு.	அறிவியல் தளவாட பெட்டிகளை இலவசமாகப் பெற்ற பள்ளிகளின் எண்ணிக்கை.		அறிவியல் தளவாட பெட்டிகளின் மதிப்பு	அறிவியல் பாடம் கற்பிப்பதில் மறு பயிற்சி பெற்ற ஆசிரியர் களின் எண்ணிக்கை			மறு பயிற்சி திட்ட மொத்தச் செலவு.
	தொடக்கப் பள்ளி.	உயர் தொடக்கப் பள்ளி.	ரூபாய்.	தொடக்கப்பள்ளி ஆசிரியர்.	உயர் தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள்.	பள்ளித் துணை ஆய்வாளர் முதலியோர்.	அதில் யூனிசெப் ஏற்றபங்கு.
(1)	(2)	(3)	(4)	(5).	(6)	(7)	(8)
1971—72 முதல் 1973—74 (முன்னோடித் திட்டநிலை.)	50	30	12,000	100	90	..	.

74—75	1,550	1,800	23,00,000	1,550	3,600	..	12 லட்சம் / 6 லட்சம்
75—76	400	..	75,000	600	..	257	1·11 லட்சம் / 0·83 லட்சம்
76—77	264	..	40,000	396	..	374	1·37 லட்சம் / 1·02 லட்சம்
77—78	..	..	..	..	..	188	ரூ. 28,000 / ரூ. 21,000
78—79	150	..	25,000	225	..	300	ரூ. 85,000 / ரூ. 63,750
	2,414	1,830	24,52,000	2,871	3,690	1,119	ரூ. 15.61 லட்சம் / ரூ. 8.70 லட்சம்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[1979 ஏப்ரல் 9

3. தொடக்கப் பள்ளிகளில் அறிவியல் கல்வி மேம்பாட்டுக்கான மேற்சொன்ன திட்டத்தின்கீழ் பயன் படுத்துவதற்காக அறிவியல் புத்தகங்களை அச்சிட்டு வெளியிடுவதற்காக அச்சுத் தாள்களையும் மேல் உறைத்தாள்களையும் அவ்வப்பொழுது யூனிசெப் நிறுவனம் கொடுத்து வந்துள்ளது.

4. தொடக்கப் பள்ளிகளில் அறிவியல் பயிற்றுவிக்கும்போது ஆங்காங்குள்ள தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள், ஆங்காங்குள்ள கருவிகள் வசதிகளை பயன்படுத்தி அந்தந்த சுற்றுப்புற சூழல்களுக்கு ஏற்ப எப்படி அறிவியல் கற்றுத்தரலாம் என்ற விவரங்கள் அடங்கிய ஒரு கைப்புத்தகத்தை தயாரிக்க 1978-79-ல் யூனிசெப் நிறுவனம் ரூ.94,000 தர இசைந்துள்ளது.

ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளில் அறிவியல் கல்வி மேம்பாடு :

5. ஆசிரியர் பயிற்சிப்பள்ளிகளில் அறிவியல் கல்வி மேம்பாட்டுக்காக பள்ளிக்கு ரூ 30,000 வீதம் 39 ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளுக்கு அறிவியல் தளவாடங்கள் புத்தகங்கள், முதலியவற்றை யூனிசெப் வழங்கியுள்ளது.

சமுதாய வளர்ச்சியோடு இணைந்த கல்வி வளர்ச்சி நடவடிக்கைள் :

6. இத்திட்டம் செங்கல்பட்டு மாவட்டம் திரூரில் உள்ள அரசினர் ஆசிரியர் பயிற்சிப் பள்ளியினால் திரூர் கிராமத்திலும் வடஆற்காடு மாவட்டம் இராணிப்பேட்டையில் உள்ள அரசினர் ஆசிரியைப் பயிற்சிப் பள்ளியினால் ஆமூர் கிராமத்திலும் செயல் படுத்தப்பட்டு வருகிறது. இப்பகுதிகளில் உள்ள இளஞ்சிறார், பள்ளி வயதுச் சிறார், பள்ளிகளில் சிலகாலம் படித்து பின்னர் நின்று விட்டவர்கள் ஆகிய அனைவருக்கும் பள்ளிக் கல்வி முறையிலோ, பள்ளிச் சாராக் கல்வி முறையிலோ எழுத்தறிவிக்க வேண்டும். என்பது இத்திட்டத்தின் நோக்கம். இத்திட்டத்திற்கான பாட நூல்கள் முதலியவற்றைத் தயாரிக்க யூனிசெப் நிறுவனம் ரூ.40,250 தர இசைந்துள்ளது.

தொடக்கக்கல்வி பாடத்திட்டத்தை புதுப்பிக்கும் திட்டம் :

7. பொதுவாக தமிழ் நாட்டிலுள்ள அனைத்துத் தொடக்கப் பள்ளிகளிலும் என்ன பாடத்திட்டம் 1-5 வகுப்புகளில் அமுலில் உள்ளதோ அதைவிட சற்று மாறுபட்ட புதுமையான ஒரு பாடத் திட்டம் முப்பது தொடக்கப் பள்ளிகளில் யூனிசெப் உதவியுடன் செயல்பட்டு வருகிறது. ஆடுதுறையிலுள்ள ஆசிரியர் பயிற்சிப் பள்ளியைச் சுற்றி திருவிடைமருதூர் ஊராட்சி ஒன்றியத்தில் 10 பள்ளிகள், ராணிப்பேட்டை ஆசிரியர் பயிற்சிப் பள்ளியைச்சுற்றி வாலாஜா ஊராட்சி ஒன்றியத்தில் 10 பள்ளிகள், திரூரில் உள்ள ஆசிரியர் பயிற்சிப் பள்ளியைச்சுற்றி திருவள்ளூர் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள 10 பள்ளிகள் ஆகிய இவைதாம் அந்த 30 பள்ளிகளாகும். இந்த 30 பள்ளிகளும் கிராமப்புறங்களில் வசிப்பவர்களும்.

1979 ஏப்ரல் 9]

ஏழ்மைக் குடும்பங்களை சேர்ந்தவர்களுமான மாணவ மாணவியருக்கு என்றே தனிக் கவனம் செலுத்தி உருவாக்கியதும், கைத்தொழில் பயிற்சிக்கு முதன்மை அளப்பதுமான சிறப்புப்பாடமுறைப்படி கற்பித்து வருகின்றன. இந்த 30 பள்ளிகளில் பயன்படுத்துவதற்கான பாடநூல்களை அச்சிடுவதற்கான செலவிற்காக யூனிசெப் நிறுவனம் ரூ.2,06,000 தர இசைந்துள்ளது.

இணைப்பு II

[393-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 678-கான விடையைக் காண்க.

விடை

(அ) ஆம்

(ஆ) சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியின் நோய்த் தடுப்பியல் துறையால் நடத்தப்பட்ட ஆராய்ச்சிகளின் கண்டுபிடிப்புகள் கீழ்வருமாறு :—

(1) ப்ரூஸெல்லோசிஸ் .— கால்நடைகளைத்தாக்கி கருச்சிதைவு உண்டாக்கும் இந்நோய் மனிதனையும் தாக்கி குளிர், காய்ச்சல், மூட்டுவலி போன்றவற்றை திரும்பத்திரும்ப உண்டாக்குகிறது. சென்னை மாநகரில், கால்நடைகள், மற்றும் மனிதரிடையே இந்நோய் கணிசமான அளவுக்கு பரவியுள்ளது என கண்டுபிடிக்கப்பட்டது.

(2) காசநோய் .— இது மனிதர்களையும், கால்நடைகளையும் பெருமளவில் பாதிக்கும் நோயாகும். காச நோயாய் இறக்கும் மாடுகள் பெரும்பாலும் மனிதவகை காச நோயால் தாக்கப்பட்டிருப்பதாக கண்டு பிடிக்கப்பட்டது.

மேற்கூறியவற்றை கருத்தில் கொண்டு இந்தியாவிலேயே முதல்முறையாக காசநோய் மற்றும் கருச்சிதைவு நோய்களற்ற மாட்டுப்பண்ணை திட்டம் 1975 ஆம் ஆண்டிலிருந்து சிறிய அளவில் செயல்படத் தொடங்கி மாடுகள் பரிசோதிக்கப்படுகின்றன.

(3) லெப்டோஸ்பைரோசிஸ் .— கால்நடைகளையும் மனிதர்களையும் தாக்கும் இந்நோய், மஞ்சள் காமாலை, சிறுநீர்ப் பிருத்தி ஆகியவற்றை ஏற்படுத்துகிறது. சென்னை மாநகரில் இந்நோய் பரவுவதற்கு எலிகளும் பெருச்சாளிகளும் முக்கிய பங்கு வகிக்கிறது என அறியப்பட்டது.